# யேசு பிறந்த நன்னாளின் நற்செய்தி 2017

TAMOUL

” நான் உங்களுக்கு ஓர் நற்செய்தியைச் சொல்ல வந்தோன் ” மாட்டுத் தொழுவத்தில் பிறந்த யேசு குழந்தையை நினைக்கையில் இந்த இரவு துயரம் நிறைந்த இரவுதானே !

மக்கள் தொகை எண்ணிக்கைக்கு பேரரசர் ஒகிஸ்டு ஆணைக்கு உட்பட்டு எல்லா குடும்பத்தினர்களும் பல நாட்களுக்கு முன்பே அவரவர்களின் வீட்டைவிட்டு வெளியேறி தங்களின் சொந்த ஊரை அடைந்தனர். அதனால் விடுதிகள் அனைத்தும் நிறைந்திருந்ததில் என்ன விந்தை ! அதனால் சூசையும், மரியும் தங்கியிருக்க மாட்டுத் தொழுவம்தான் மிஞ்சியிருந்தது.

அந்த இரவின் மற்றொரு துயரம் யாதெனில் குடும்பத்தில் சில உறுப்பினர்கள் கண் பார்வையற்றவர்கள், கால் ஊனமுற்றவர்கள், தொழுநோயாளர்கள், காது கேளாதவர்கள் என்பதனால் சமுதாயத்திலிருந்து நீக்கி வைக்கப்படுகின்றார்கள். இதைவிடக் கொடுமை பல ஆண்டுகளாக ரோமைப் பேரரசின் ஆட்சியின்கீழ் வாழும் மக்கள் படும் துன்பங்களே.

அந்த நல்லிரவில்தான் இறைத்தூதன் ஆடுமேய்க்கும் இடையர்களுக்கு பின் வரும் மொழியினை உறுதியுடன் உரைத்தார். ” நான் உங்களுக்கு ஓர் நற்செய்தியைச் சொல்ல வந்தேன். ( லூக்கா - 2 .10 ) அந்த நற்செய்தி யாதெனில் ” அதுவே மீட்பரின் பிறப்பு. அவரே இருளின் நடுவில் ஒளியாய் இருக்கின்றார். ( லூக்கா - 2. 9 ) அவரிடம் குருடர்கள் பார்வையடைவர், நொண்டிகள் நடப்பர், பெருநோயர்கள் தூய்மையடைவர், செவிடர்கள் கேட்பர், இறந்தவர்கள் உயிர்த்தெழுவர், எளியோர்கள் நற்செய்தியை பெறுவர். ( லூக்கா - 7. 22 )

இன்றைய நவீன உலகில் செய்திகள் உலவி வரும் விரைவையும் அதன் முடிவின் துன்பத்தையும் நினைக்கையில் முழுமையாக மனித இனமே இருளில் மூழ்கியதாக தோன்றுகின்றது.

கிருத்துவின் சீடர்களான நாம், எல்லாம் தீமைக்கே என்ற மனநிலையிலும், தன்னம்பிக்கையற்ற நிலையிலும் மூழ்கிவிடுவோமா ? இல்லைதானே !

இன்று யேசு பிறந்த திருநாள். இந்த நற்செய்தியை அறிவிக்க அது நம்மை அழைக்கின்றது என்பதை நாம் நினைவு கொள்வோம். அதனை நம் குடும்பத்தினர்களுக்கும், கிருத்துவ மக்களுக்கும், உலகிற்கும் அறிவிக்க துணிவோம்.

கிருத்துவின் சீடர்களாகிய நாம், நம்மை யார் என்பதனை நினைந்து மகிழ்ச்சியடைவோம். நாளும் மற்றவர்களுக்கு நம்மால் எதைக் கொடுக்க முடியும் என்பதனை நினைந்து மகிழ்ச்சியடைவோம். உலகை மனிதநேய மயமாக மாற்றும் பல பொருப்புக்களையும் நாம் ஏற்றிருப்பதை நினைந்து மகிழ்வோம்.

இந்த யேசு பிறந்த திருநாள் நற்செய்தி ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள ஊக்கமளிக்கட்டும். இடைநிலை துன்பத்தை மறப்பதற்காக இதனை சொல்லவில்லை மாறாக ” யேசு பிறந்த நாளிலிருந்து ஒளி இருளில் ஒளிர்கின்றது. அது என்றும் இருளினால் மறைக்கப்படாது. ” ( அருளப்பர் - 1. 5 )

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினர்களுக்கும், கிருத்துவ மக்களுக்கும், உலகிற்கும் எனது அன்பான யேசு பிறந்த நன்னாள் நல்வாழ்த்துக்கள்.

+ Pascal DELANNOY

EVEQUE DE SAINT DENIS EN FRANCE